# நாம் நமது உலகத்தை வண்ணமயமாக்குவோம்.

## 2025 ஆம் ஆண்டு சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஏற்பாடு செய்த நாடளாவிய ஓவியப் போட்டி.

- போட்டியின் தலைப்பு – (**நமது நாட்டின் வீரர்கள்**) (மேற்கூறிய தலைப்புடன் தொடர்புடைய எந்தவொரு துணைத்தலைப்பையும் உருவாக்குவதற்கு படைப்பாளிக்கு சுதந்திரம் உண்டு.)

| | | |
|---|---|---|
| நீர்வர்ணம், பாஸ்டல், போஸ்டர் நிறங்கள், எண்ணெய் வர்ணங்கள் முதலியன.... | ஓவியத்தின் அளவு: அகலம் 18 × உயரம் 14. | காகிதம் அல்லது கார்ட்போர்டு மேற்பரப்பைப் பயன்படுத்தலாம். |

- **இறுதிப் போட்டியாளர்களுக்கு பின்வருமாறு பணப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

| போட்டிப்பிரிவு | தரம் | முதல் இடம் (ரூபா.) | இரண்டாம் இடம் (ரூபா.) | மூன்றாம் இடம் (ரூபா.) | சிறந்த திறமை (ரூபா.) | திறன்கள் (ரூபா.) |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை (**B**) | 6 | 55,000.00 | 37,000.00 | 27,000.00 | 20,000 x 03 | 10,000 x 05 |
| கனிஷ்டப் பிரிவு (**C**) | 7,8,9 | 60,000.00 | 40,000.00 | 30,000.00 | 20,000 x 03 | 10,000 x 05 |
| முதன்மைப் பிரிவு (**D**) | 10,11 | 65,000.00 | 45,000.00 | 35,000.00 | 20,000 x 03 | 10,000 x 05 |
| இரண்டாம் நிலைமுதன்மைப் பிரிவு(**E**) | 12,13 | 75,000.00 | 50,000.00 | 40,000.00 | 25000 x 03 | 15,000 x 05 |

- **போட்டி நிபந்தனைகள்**:

✓ போட்டியாளரின் தாய் அல்லது தந்தை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளுக்குள் வெளிநாட்டில் வேலை செய்திருப்பது கட்டாயமாகும்.
✓ ஒரு போட்டியாளரால் ஒரு வடிவமைப்பைமட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
✓ அனைத்து ஓவியங்களும் பாடசாலையின் பாட ஆசிரியரின் சான்றிதழுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் துணை அதிபர் அல்லது அதிபரால் முத்திரையிடப்பட்டு சான்றளிக்கப்பட வேண்டும்.
✓ வடிவமைப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான கடைசி திகதி 2026 பெப்ரவி 28 ஆகும். ( 2026.02.28 )
✓ உங்கள் படைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
✓ நடுவர் மன்றத்தின் தீர்ப்பே இறுதியானது.

✓ உங்கள் படைப்பை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் உரிமையை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கொண்டுள்ளது.

- **விண்ணப்பத்தைத் தயாரித்து வடிவமைப்பைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள்**

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி, உங்கள் விண்ணப்பத்தை போட்டியாளர் தயாரித்து முழுமையாக நிரப்ப வேண்டும். அதற்குரிய சான்றிதழ்களை பாடசாலை அதிபர் சான்றளித்து (A4 காகிதத்தில்) இணைக்க வேண்டும்.சேர்க்கவேண்டியவை:வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நியமிக்கப்பட்ட போட்டியாளரின் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் தெளிவான பிரதி,போட்டியாளரின் பிறப்பு சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி,தேசிய அடையாள அட்டையின் பிரதி (இருப்பின்).இவற்றை ஒன்றாக இணைத்து கீழ்காணும் முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பவும். அல்லது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிராந்திய/மாவட்ட அலுவலகத்திற்கு நேரடியாக கொண்டு சென்று ஒப்படைக்கவும்.

குறிப்பு - சமர்ப்பிக்கப்படும் ஓவியத்தின் இடது மேல் மூலையில்“**2025 - ஓவியப் போட்டி**”என்று குறிப்பிடவும். ஓவியப் போட்டியைப் பற்றிய புதிய தகவல்கள் அல்லது பிராந்திய அலுவலகங்களின் முகவரிகள் தொடர்பான தகவல்களைப் பெற **www.slbfe.lk**ஐப் பயன்படுத்தி அறிந்து கொள்ளுங்கள்.

முகாமையாளர்
நலன்புரிப் பிரிவு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
இல. 465, சிமந்தராய கட்டிடம், கனஹேன,
பத்தரமுல்ல.
011 2 365471 / 2365017

**2025 ஆம் ஆண்டு சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்துடன் இணைந்து நாடளாவிய ஓவியப் போட்டி நடத்தப்பட உள்ளது.**

## மாதிரி விண்ணப்ப்

01. மாணவரின் பெயர்:
02. ஆண் / பெண் :
03. பிறந்த திகதி:
04. போட்டியாளரின் தேசிய அடையாள அட்டை எண் (இருப்பின்):
05. தனிப்பட்ட முகவரி:
06. பிரதேச செயலகப் பிரிவு:
07. வசிக்கும் மாவட்டம்:
08. போட்டியிடும் பிரிவு (மேலே குறிப்பிடப்பட்ட B / C / D / E பிரிவுகளிலிருந்து):
09. ஓவியத்தின் தலைப்பு:
10. ஓவியத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகம்:
11. பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி
12. பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்:
13. வெளிநாட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த தாய் / தந்தையின் முழுப் பெயர்:
14. வெளிநாட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த தாய்/தந்தையின் அடையாள அட்டை எண்:
15. வெளிநாட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த தாய்/தந்தையின் கடவுச்சீட்டு எண்:
16. தொலைபேசி எண்கள்–கையடகத்தொ.இல : ................................. : வசிப்பிடம் ..........................
17. இந்த வடிவமைப்பு என்னுடையது என்று நான் சான்றளிக்கிறேன்.(போட்டியாளரின் கையொப்பத்தை உள்ளிடவும்)
18. இந்தப் படைப்பு மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலையின் மாணவரின் படைப்பு என்று நான் சான்றளிக்கிறேன்.(பாட ஆசிரியரின் பெயர் மற்றும் கையொப்பம்)
19. இந்தப் படைப்பு மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலையின் மாணவரின் படைப்பு என்று நான் சான்றளிக்கிறேன். (அதிபரின் பெயர் மற்றும் கையொப்பம்)
20. பாடசாலையின் தொலைபேசி இல: